இந்தியாவின் நிலக்கரி உற்பத்தி 100 கோடி டன்னை கடந்து சாதனை: பிரதமர் மோடி பாராட்டு

புதுடெல்லி, மார்ச்.22

இந்தியாவின் நிலக்கரி உற்பத்தி நடப்பு நிதியாண்டில் 100 கோடி டன்னை கடந்து உள்ளது. இதை பிரதமர் மோடி பாராட்டி உள்ளார்.

உலகின் 5வது மிகப்பெரிய பொருளாதார நாடான இந்தியா, நிலக்கரி உற்பத்தியில் முன்னணியில் உள்ளது. நாட்டின் மின் உற்பத்தி மற்றும் பல்வேறு தொழில்துறையின் முக்கிய ஆதாரமாக இந்த நிலக்கரி பயன்படுத்தப்படுகிறது.

நாட்டின் நிலக்கரி உற்பத்தி நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், கடந்த 2023–24ம் நிதியாண்டில் 99.78 கோடி டன் நிலக்கரி உற்பத்தி செய்யப்பட்டது.

இது நடப்பு நிதியாண்டில் 100 கோடி டன் உற்பத்தியை கடந்து உள்ளது. நடப்பு நிதியாண்டு வருகிற 31ந்தேதி நிறைவடையும் நிலையில், அதற்கு முன்னரே 100 கோடி டன் உற்பத்தி எட்டப்பட்டு உள்ளது.

வரலாற்று சிறப்பு மிக்க இந்த சாதனையை மத்திய நிலக்கரித்துறை அமைச்சர் கிஷன் ரெட்டி வெளியிட்டு உள்ளார்.

இதுகுறித்து மேலும் அவர் தனது எக்ஸ் தளத்தில், 'அதிநவீன தொழில்நுட்பம் மற்றும் திறமையான நடவடிக்கைகள் மூலம் இந்தியா தனது நிலக்கரி உற்பத்தியை அதிகரித்து இருப்பது மட்டுமின்றி, நிலையான மற்றும் பொறுப்பான சுரங்கத்தொழிலையும் உறுதி செய்து இருக்கிறது' என குறிப்பிட்டு இருந்தார்.

மேலு அவர், 'இந்த சாதனை நமது அதிகரித்து வரும் மின் தேவைகளை பூர்த்தி செய்யும். அத்துடன் பொருளாதார வளர்ச்சியை ஊக்குவித்து, ஒவ்வொரு இந்தியருக்கும் பிரகாசமான எதிர்காலத்தையும் உறுதி செய்யும்' என்றும் கூறியிருந்தார்.

பிரதமர் மோடியின் தலைமையின் கீழ் இந்தியா ஒரு உலகளாவிய எரிசக்தி தலைமையாக உருவெடுத்து வருவதாக கூறியிருந்த கிஷன் ரெட்டி, இந்த மைல்கல்லை எட்ட உதவிய சுரங்கத்துறை தொழிலாளர்களையும் பாராட்டி இருந்தார்.

நிலக்கரி உற்பத்தியில் இந்தியாவின் வரலாற்று சாதனையை பிரதமர் மோடி பாராட்டி உள்ளார்.

அமைச்சர் கிஷன் ரெட்டியின் பதிவுக்கு பதிலளிக்கும் வகையில் தனது எக்ஸ் தளத்தில் பிரதமர் மோடி கூறியிருந்ததாவது:

நடப்பு நிதியாண்டில் நிலக்கரி உற்பத்தி 100 கோடி டன்னை கடந்திருப்பது, இந்தியாவுக்கு ஒரு பெருமைமிகு தருணம் ஆகும். இந்த மகத்தான மைல்கல்லைக் கடந்தது ஒரு குறிப்பிடத்தக்க சாதனையாகும்.

இது எரிசக்தி பாதுகாப்பு, பொருளாதார வளர்ச்சி மற்றும் தன்னம்பிக்கைக்கான நமது உறுதிப்பாட்டை எடுத்துக்காட்டுகிறது.

நிலக்கரி சுரங்கத் துறையுடன் தொடர்புடைய அனைவரின் அர்ப்பணிப்பு மற்றும் கடின உழைப்பையும் இந்த சாதனை பிரதிபலிக்கிறது. இவ்வாறு பிரதமர் மோடி கூறியிருந்தார்.

ஷாலிமார்–சென்னை ரெயிலில் முன்பதிவில்லா கூடுதல் பெட்டிகள் இணைப்பு

சென்னை, மார்ச்.22

ஷாலிமார் – சென்னை சென்ட்ரல் செல்லும் (வண்டி எண். 22825) எக்ஸ்பிரஸ் ரெயிலில் ஒரு ஏசி டூ டயர் மற்றும் ஒரு ஏசி த்ரீ டயர் பெட்டிகளுக்கு பதிலாக இரண்டு முன்பதிவில்லா இரண்டாம் வகுப்பு பெட்டிகள் சேர்க்கப்படும்.

இந்த மாற்றமானது ஏப்ரல் 15ம் தேதி முதல் அமலுக்கு வருகிறது.

அதேபோல் மறுமார்க்கத்தில் இருந்து சென்னை சென்ட்ரல் – ஷாலிமார் செல்லும் (வண்டி எண். 22825) எக்ஸ்பிரஸ் ரெயிலிலும் ஒரு ஏசி டூ டயர் மற்றும் ஒரு ஏசி த்ரீ டயர் பெட்டிகளுக்கு பதிலாக இரண்டு முன்பதிவில்லா இரண்டாம் வகுப்பு பெட்டிகள் சேர்க்கப்படும். இந்த மாற்றமானது ஏப்ரல் 16ம் தேதி முதல் அமலுக்கு வருகிறது.

இந்த திருத்தத்திற்குப் பிறகு மேற்கண்ட ரெயில்களின் பெட்டி அமைப்பு 2 ஏசி டூ டயர் பெட்டிகள், 6 ஏசி த்ரீ டயர் பெட்டிகள், 5 ஸ்லீப்பர் வகுப்பு பெட்டிகள், 4 பொது இரண்டாம் வகுப்பு பெட்டிகள், 1 இரண்டாம் வகுப்பு பெட்டி மற்றும் 1 லக்கேஜ் கம் பிரேக் வேன் இருக்கும் என ரெயிவே அறிவித்துள்ளது.

நீர் மேலாண்மைக்காக தமிழக அரசுக்கு 3 விருதுகள்: மத்திய அரசு வழங்கி பாராட்டு

புதுடெல்லி, மார்ச்.22

தமிழ்நாடு முழுவதும் நீர்ப்பாசன உள்கட்டமைப்பை நவீனமயமாக்குதல், நீர் பயன்பாட்டு திறனை மேம்படுத்துதல் மற்றும் வேளாண் உற்பத்தியை அதிகரிப்பதை நோக்கமாக கொண்டு கடந்த 2017ம் ஆண்டு உலக வங்கி நிதி உதவியுடன் தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்டம் தொடங்கப்பட்டது. இந்த திட்டத்தின் கீழ் மொத்தம் ரூ.3,249.12 கோடியில் 2,626 நீர்த்தேக்க நிலைகள், 347 அணைக்கட்டுகள், 4,981 கிலோ மீட்டர் நீள வினியோக வாய்க்கால்கள் மற்றும் கால்வாய்கள் புனரமைக்கப்பட்டுள்ளது.

78 செயற்கைமுறை நீரேற்று கிணறுகள், 107 கிலோமீட்டர் நீள பாசன வாய்க்கால் கரை உள்ளிட்ட 1,17,290 ஹெக்டேர் பரப்பளவில் பாசனப் பகுதி மேம்பாட்டுப் பணிகள் நிறைவடைந்துள்ளன. 34 மாவட்டங்களில் உள்ள 15 லட்சத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் நீர்வள மேலாண்மை மற்றும் வேளாண் உற்பத்தியில் பயனடைந்துள்ளனர்.

தமிழகத்தில் இந்த திட்டத்தை சிறப்பாக செயல்படுத்தியமைக்காக 2024 ம் ஆண்டுக்கான சிறந்த ஒருங்கிணைந்த நீர்வள மேலாண்மை விருதுக்கு தமிழக அரசு தேர்வு செய்யப்பட்டுள்ளது. இதேபோன்று பங்கேற்பு பாசன மேலாண்மை மற்றும் சிறந்த நீர்வள ஆதார திட்ட விருதும் தமிழக அரசுக்கு கிடைத்துள்ளது.

டெல்லியில் நடந்த விழாவில் இந்த 3 விருதுகளை தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்ட இயக்குனரும், கூடுதல் தலைமை செயலாளருமான ஜவகர், நீர்வளத்துறை முதன்மை தலைமை என்ஜினீயர் மன்மதன், நீர்வளத்துறை கண்காணிப்பு என்ஜினீயர் சிவக்குமார் ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

IndiaShelter Home Loans

இந்தியா ஷெல்டர் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்

பதிவு அலுவலகம்: மனை – 15, 6வது தளம், செக்டர் – 44, இன்ஸ்டிடியூஷனல் ஏரியா, குருகிராம், ஹரியானா – 122002

கிளை அலுவலகம்: 2 வீ காம்ப்ளக்ஸ், இரண்டாவது தளம், எண்.4/316, ஜின்னடி சாலை, எம்.ஏ.நகர், பாடியநல்லூர், ரெட்ஹில்ஸ், சென்னை, தமிழ்நாடு 600052.

அசையா சொத்துக்கான சுவாதீன அறிவிப்பு

கீழே கையொப்பமிட்டுள்ள இந்தியா ஷெல்டர் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்டின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி அவர்கள், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (செக்யூரிட்டி) சட்டத்தின் கீழும், மேற்சொன்ன சட்டத்தின் 13(2) வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழும், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 3வது விதிமுறைக்கு ஏற்ப கீழ்க்குறிப்பிட்டுள்ள கடன்தாரர் மற்றும் சொத்தின் உரிமையாளர்/உத்தரவாததாரர் ஆகியோருக்கு அனுப்பிய டிமாண்டு நோட்டீசில் குறிப்பிடப்பட்டுள்ளபடி செலுத்த வேண்டிய தொகையை மேற்சொன்ன நோட்டீஸ் கிடைத்த 60 நாட்களுக்குள் திரும்ப செலுத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார். சொத்தின் உரிமையாளர் மற்றும் இதர நபர் மேற்சொன்ன தொகையை திரும்பச் செலுத்த தவறியதால் கடன்தாரர் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் அறிவிக்கப்படுகிறது யாதெனில் கீழே கையொப்பமிட்டுள்ள அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர் கீழ்க்குறிப்பிட்டுள்ள சொத்தை மேற்சொன்ன சட்டத்தின் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், மேற்சொன்ன விதிகளின் 8 மற்றும் 9வது விதிமுறைக்கு இணங்கவும் வசதிகரம் எடுத்துக் கொண்டார். தற்போது, கடன்தாரருக்கு குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் எச்சரிக்கப்படுவது யாதெனில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள சொத்து இந்திய வெல்டர் சர்வீஸஸ் லிமிடெட்டுக்கு திரும்ப செலுத்த வேண்டிய தொகை மற்றும் வட்டி, கட்டணங்களுக்கு, பிணையமாக உள்ளது என்பதால், யாரும் மேற்படி சொத்து தொடர்பாக எந்தவித விலைங்கும் மற்றும் தொடர்புகளையும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

கடன்தாரர்/உத்தரவாததாரர் (சொத்தின் உரிமையாளர்) பெயர், கடன் கணக்கு எண்.	சாண்ட்ட்/அடமானம் வைக்கப்பட்ட சொத்தின் விவரம் (சொத்தின் அனைத்து பகுதிகளும் துண்டுகளும் அடங்கியது)	கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் கோரிக்கை அறிவிப்பு தேதியன்று நிலுவை தொகை	சுவாதீன தேதி
திரு./ திருமதி. பொன்னி சக்கரவர்த்தி திரு./ திருமதி. கோபி சி எண் 1024 சாலை தெரு, சயனாவரம் ஜாகிர் சயனாவரம் வேலூர் தமிழ்நாடு 631051 ரெட்ஹில்ஸ் 1, மேலும் : மனை எண்.33, எல். எப்.எண். 177 1a, 177 1b, புதிய எண்.177 1a1 177 1b1a1a. புீதுரு பகவான் நகர், சயனாவரம் கிராமம், தெமிலி தாலுக்கா, ராணிப்பேட்டை மாவட்டம், பின்கோடு, தமிழ்நாடு – 631 051. கடன் கணக்கு எண்; HL11CHLON5000005063324 AP-10150390	சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும் மற்றும் நிலம் மற்றும் உத்தேசிக்கப்பட்டுள்ள கட்டிடம். மனை எண்.33, பழைய எண். எண்.177/1a, 177/1b, புதிய எண்.எண்.177/1a1, 177/1b1a1a-ல் உள்ள 1372 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட நிலம். இது புீதுரு குருபகவான் நகர், சயனாவரம் கிராமம், தெமிலி தாலுக்கா, ராணிப்பேட்டை மாவட்டத்தில் உள்ளது. எல்லைகள் : வடக்கு - 20 அடி அகல சாலை, தெற்கு - எண். எண்.251, கிழக்கு - மனை எண்.32, மேற்கு - கலி நிலம். விஸ்தீரணம் : கிழக்கிலிருந்து மேற்காக வடக்குப் பக்கத்தில் 3 அடி, கிழக்கிலிருந்து மேற்காக தெற்குப் பக்கத்தில் 25 அடி, வடக்கிலிருந்து தெற்காக கிழக்குப் பக்கத்தில் 48 அடி, வடக்கிலிருந்து தெற்காக மேற்குப் பக்கத்தில் 50 அடி. இந்த சொத்தானது தெமிலி சார் பதிவு மாவட்டம் மற்றும் வேலூர் பதிவு மாவட்டத்தில் உள்ளது.	23 டிசம்பர் 2024 தேதியிட்ட மேற்கண்ட கோரிக்கை அறிவிப்பில் **திரு./ திருமதி. பொன்னி சக்கரவர்த்தி திரு./ திருமதி. கோபி சி** ஆகியோரை கடன் கணக்கு எண். HL11CHLON5000005063324-க்கு 17.12.2024 தேதியின்படி நிலுவைத் தொகை ரூ.3,08,909/ (ரூபாய் எட்டு லட்சத்து எட்டாயிரத்து தொள்ளாயிரத்து ஒன்பது மட்டும்) 18.12.2024 முதல் வட்டி மற்றும் பிற கட்டணங்கள் மற்றும் தொகையை செலுத்துமாறு அழைப்பு விடுக்கப்படுகிறது.	18.03.2025 (அடையான சுவாதீனம்)

இடம்: ராணிப்பேட்டை,
தேதி: 22.03.2025

அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இந்தியா ஷெல்டர் பைனான்ஸ் கார்ப்பரேஷன் லிமிடெட்.

ஏதேனும் கேள்வி இருந்தால் தயவு செய்து திரு. கல்லூரிரெங்கன், மொபைல் எண். 9042298450 அல்லது சாந்தா, மொபைல் எண். 8072323056, பார்கர் மொபைல் எண்.9500943603 ஆகியோரை தொடர்பு கொள்ளலாம்.

ஃபெட்பேங்க் ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட், ஏல அறிவிப்பு

இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிப்பது யாதெனில், மிகைக்கடன் கீழுள்ள அல்லது கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறிய அல்லது வரம்பைக் கடந்து விட்ட வாடிக்கையாளர்களின் கடன் கணக்குகளுக்குச் (கீழே குறிப்பிடப்பட்டுள்ளது) சொந்தமான தங்க நகைகளை ஃபெட்பேங்க் ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட், நிறுவனம் ஏலமிட முடிவு செய்துள்ளது. இந்த ஏலமானது கீழே குறிப்பிடப்பட்டுள்ள உரிய கிளைகளில் **02.04.2025, புதன்கிழமை அன்று காலை 10.00 மணி முதல் பகல் 12.00 மணிக்கு இடையில்** நடைபெறும். ஏல நடைமுறை நிறைவடையும் வரை ஏலம் தொடரும்.

சென்னை - வடக்கு - அம்பத்தூர் OT - 7548898865, **FEDGL01790**005800, 005818, **ஆவடி** - 9543071752, **FEDDS01650**000321, 000327, **மேடவாக்கம்** - 9095851519, **FEDGL01890**006391, **நங்கநல்லூர்** - 8778671808, **FEDGL01700**009356, 009398, **பல்லாவரம்** - 9551889191, **FEDGL01680**008425, **சென்னை தெற்கு - முகப்பேர் கிழக்கு** 9677211285, **FEDGL02150**004610, FEDDS02150000081, **எம்டிசர் சாலை** - 7904237838, **FEDGL00070**008550, **பெரம்பூர்** - 9840441045, **FEDGL02090**007246, 007247, **ராயபுரம்** -9941481114, **FEDGL01670**010181, **திருவொற்றியூர்** 9443071442, **FEDGL04580**001127

நேரத்திலோ இடத்திலோ மாற்றம் ஏதும் ஏற்பட்டால் அது குறித்து எமது **www.fedfina.com** இணையத்தளத்தில் தெரிவிக்கப்படும். ஏலத்தில் கலந்து கொள்ளும் ஏலதாரர்கள் அனைவருக்கும் அவர்கள் ஏலப்புள்ளிகளைத் தாக்கல் செய்ததையடுத்து அவை தேர்ந்தெடுக்கப்பட்டனவா தள்ளுபடி செய்யப்பட்டனவா என்பது தெரிவிக்கப்படும். நகைகளை மீட்க விரும்பும் வாடிக்கையாளர்கள் 01.04.2025 அன்று அல்லது அதற்கு முன் தாங்கள் நகைகளை அடமானம் வைத்த கிளையை நேரிடையாக அணுகலாம் அல்லது மேற்குறிப்பிட்ட தொடர்பு எண்ணை அழைக்கலாம். இது தொடர்புடைய விதிமுறைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டது.

ஏலமானது அந்தந்தக் கிளைகளில் நடத்தப்படும் நிலையில் ஏதேனும் காரணத்தால் குறிப்பிட்ட நாளில் ஏலம் நிறைவடையாவிட்டால் ஏலமானது அடுத்து வரும் வேலை நாளில் மாவட்ட அளவிலான கிளையில் நடத்தப்படும். இது பற்றிய விவரங்கள் முன்னரே எமது இணையத்தளத்தில் வெளியிடப்படும். இந்த ஏல நடவடிக்கை குறித்து மேற்கொண்டு தகவல் எதுவும் வெளியிடப்படமாட்டாது.

நாள்: 22.03.2025 **ஒம்/- அதிகாரப்பூர்வக் கையொப்பதாரர், சார்பில்**
இடம்: சென்னை **ஃபெட்பேங்க் ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட்.**

ஃபெட்பேங்க் ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட், ஏல அறிவிப்பு

இதன் மூலம் பொதுமக்களுக்கு அறிவிப்பது யாதெனில், மிகைக்கடன் கீழுள்ள அல்லது கடனைத் திருப்பிச் செலுத்தத் தவறிய அல்லது வரம்பைக் கடந்து விட்ட வாடிக்கையாளர்களின் கடன் கணக்குகளுக்குச் (கீழே குறிப்பிடப்பட்டுள்ளது) சொந்தமான தங்க நகைகளை ஃபெட்பேங்க் ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட், நிறுவனம் ஏலமிட முடிவு செய்துள்ளது. இந்த ஏலமானது கீழே குறிப்பிடப்பட்டுள்ள உரிய கிளைகளில் **02.04.2025, புதன்கிழமை அன்று காலை 10.00 மணி முதல் பகல் 12.00 மணிக்கு இடையில்** நடைபெறும். ஏல நடைமுறை நிறைவடையும் வரை ஏலம் தொடரும்.

நெய்வேலி - 9677304616, **FEDGL04440**005103, 005122, 005129, 005136, 005162, **பாலக்கரை** - 9952354799, **FEDGL0185**0007710, **விழுப்புரம்** -9444189414, **FEDGL03970**002890, 002923, 002943

நேரத்திலோ இடத்திலோ மாற்றம் ஏதும் ஏற்பட்டால் அது குறித்து எமது **www.fedfina.com** இணையத்தளத்தில் தெரிவிக்கப்படும். ஏலத்தில் கலந்து கொள்ளும் ஏலதாரர்கள் அனைவருக்கும் அவர்கள் ஏலப்புள்ளிகளைத் தாக்கல் செய்ததையடுத்து அவை தேர்ந்தெடுக்கப்பட்டனவா தள்ளுபடி செய்யப்பட்டனவா என்பது தெரிவிக்கப்படும். நகைகளை மீட்க விரும்பும் வாடிக்கையாளர்கள் 01.04.2025 அன்று அல்லது அதற்கு முன் தாங்கள் நகைகளை அடமானம் வைத்த கிளையை நேரிடையாக அணுகலாம் அல்லது மேற்குறிப்பிட்ட தொடர்பு எண்ணை அழைக்கலாம். இது தொடர்புடைய விதிமுறைகளுக்கும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டது.

ஏலமானது அந்தந்தக் கிளைகளில் நடத்தப்படும் நிலையில் ஏதேனும் காரணத்தால் குறிப்பிட்ட நாளில் ஏலம் நிறைவடையாவிட்டால் ஏலமானது அடுத்து வரும் வேலை நாளில் மாவட்ட அளவிலான கிளையில் நடத்தப்படும். இது பற்றிய விவரங்கள் முன்னரே எமது இணையத்தளத்தில் வெளியிடப்படும். இந்த ஏல நடவடிக்கை குறித்து மேற்கொண்டு தகவல் எதுவும் வெளியிடப்படமாட்டாது.

நாள்: 22.03.2025 **ஒம்/- அதிகாரப்பூர்வக் கையொப்பதாரர், சார்பில்**
இடம்: பாண்டிச்சேரி **ஃபெட்பேங்க் ஃபைனான்சியல் சர்வீசஸ் லிட்.**

இந்திய அரசு
நிதி அமைச்சகம், நிதி சேவைகள் துறை.
மும்பை கடன்கள் மீட்பு தீர்ப்பாயம் எண். I
2வது தளம், டெலிபோன் பவன், கொலாபா மார்க்கெட் கொலாபா, மும்பை 400 005.
மீட்பு அதிகாரிக்கு முன்பாக,
கடன்கள் மீட்பு தீர்ப்பாயம் I
மீட்பு நடவடிக்கை எண். 11/2006
அடுத்த தேதி: 24/04/2025
Exh. **எண்: 37**

ஓம்காரா அசெட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் பிரைவேட் லிமிடெட் **...விண்ணப்பதாரர்**

எதிர்

டீம் ஆசியா செமிகண்டக்டர் லிமிடெட் **... பிரதிவாதிகள்**

(அதிகாரப்பூர்வ கலைப்பாளர் மூலம் கலைப்பில் உள்ளது, ஆந்திரப் பிரதேச உயர் நீதிமன்றம்)

விற்பனை அறிவிப்பைத் தீர்ப்பதற்கான அறிவிப்பு

அதேசமயம், மாண்புமிகு மீட்பு அதிகாரி DRT I, **மும்பை** அவர்கள் விண்ணப்பதாரரின் வங்கி/நிதி நிறுவனத்திற்கு வட்டி மற்றும் செலவுடன் **ரூ.17,50,41,306.50/- (ரூபாய் பதினேழு கோடியே ஐம்பது லட்சத்து நாற்பத்தோராயிரத்து முந்நூற்று ஆறு மற்றும் ஐம்பது பைசா மட்டும்)** தொகையை செலுத்துவதற்காக **ஆர்.பி. எண். 11/2006ல்** மீட்புச் சான்றிதழை வழங்கியுள்ளார்.

விற்பனை அறிவிப்பை தயாரிப்பதற்கும் அதன் விதிமுறைகளைத் தீர்ப்பதற்கும் ஆகஸ்ட் 06, 2024 அன்று இது பட்டியலிடப்பட்டுள்ளது என்பதை இதன் மூலம் உங்களுக்குத் தெரிவிக்கிறோம். பிரகடன விதிமுறைகளைத் தீர்ப்பதில் பங்கேற்கவும், மேற்கூறிய சொத்துக்கள் அல்லது அதன் எந்தப் பகுதியுடனும் இணைக்கப்பட்டுள்ள ஏதேனும் வில்லங்கங்கள், கட்டணங்கள், உரிமைகோரல்கள் அல்லது பொறுப்புகள் குறித்து கீழே கையொப்பமிட்டவரின் கவனத்திற்குக் கொண்டுவரவும் இதன் மூலம் உங்களுக்கு அழைப்பு விடுக்கப்படுகிறது.

அசையாச் சொத்தின் விவரக்குறிப்பு

நிலத்தின் சிறு துண்டுகளும் அதன் அனைத்துப் பகுதியும் உள்ள இடம்

1. பிரதிவாதி எண்.10ன் அசையா சொத்துக்கள், ''நிலத்தின் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். சர்வே எண்(கள்) 266/12, 267/1, 267/4, 267/5, 308/10 மற்றும் 308/11, எண். 205ல் உள்ள ஏக்கர் 69 சென்ட் நிலம், பழையனூர், மதுராந்தகம் தாலுகா மற்றும் சார் பதிவு மாவட்டம் மற்றும் சென்னை எம்ஜிஆர் பதிவு மாவட்டம், தமிழ்நாடு மாநில எல்லைக்குள் உள்ளது மற்றும் அங்குள்ள அனைத்து கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள் மற்றும் நிலத்துடன் இணைக்கப்பட்ட அல்லது நிலத்துடன் நிரந்தரமாக இணைக்கப்பட்ட அனைத்து ஆலை மற்றும் இயந்திரங்களுடன்."

2. பிரதிவாதி எண்.11ன் அசையா சொத்துக்கள், ''நிலத்தின் சிறு துண்டுகளும் அதன் பகுதிகளும். சர்வே எண்(கள்) 257/3, 275/4, 275/8, 302/2, 306/2, 306/3B, 306/6, 306/7, 306/8, 306/9, 306/10, 298/7, 310/2, 310/9, 310/10 மற்றும் 310/11 ஆகிய எண். 205ல் உள்ள 8 ஏக்கர் 38 சென்ட் நிலம், மதுராந்தகம் மாவட்ட கிராம எல்லைகள், பழையனூர், மதுராந்தகம் தாலுகா மற்றும் சார் பதிவு மாவட்டம் மற்றும் சென்னை எம்ஜிஆர் பதிவு மாவட்டம், தமிழ்நாடு மாநில எல்லைக்குள் உள்ளது மற்றும் அங்குள்ள அனைத்து கட்டிடங்கள் மற்றும் கட்டமைப்புகள் மற்றும் நிலத்துடன் இணைக்கப்பட்ட அல்லது நிலத்துடன் நிரந்தரமாக இணைக்கப்பட்ட அனைத்து ஆலை மற்றும் இயந்திரங்களுடன்."

மார்ச் 18, 2025 அன்று எனது கையொப்பமிட்டு தீர்ப்பாயத்தின் முத்திரையுடன் வழங்கப்பட்டது.

(மகேஷ் குமார்)
மீட்பு அதிகாரி
கடன்கள் மீட்பு தீர்ப்பாயம் I, மும்பை

பெறுநர்

1. திரு. பின்னமனேனி சுப்ர ராவ், வசிப்பிடம் : D.3-4-526/15 லிங்கம்பள்ளி, ஹைதராபாத் 500027 ஆந்திரப் பிரதேசம்.
2. திரு. சி. விவேக், வசிப்பிடம்: பார்க் வியூ அபார்ட்மென்ட், பிளாட் எண்.403,1-2-606/80, ராமானந்த் நகர், இந்திரா பூங்காவிற்கு எதிரே, எல்ஜசி காலனி அருகில், ஹைதராபாத், ஆந்திரப் பிரதேச மாநிலம்.
3. திரு.ஏ.விஜயபாஸ்கர ரெட்டி, வசிப்பிடம் : 3-4-526/15/A, லிங்கம்பள்ளி, ஹைதராபாத் 500027.
4. திரு.கே.வி.நரசிம்ம ரெட்டி, வசிப்பிடம் : பிளாட் எண்.403 பார்க் வியூ அபார்ட்மென்ட் 1-2-606/80, ராமானந்த் நகர், இந்திரா பூங்காவிற்கு எதிரே, எல்ஜசி காலனி அருகில், ஹைதராபாத்.
5. டீம் ஆசியா செமிகண்டக்டர்ஸ் (இந்தியா) லிமிடெட், பதிவு அலுவலகம்: 3-4-526/15, லிங்கம்பள்ளி, ஹைதராபாத் 500027, ஆந்திரப் பிரதேசம்.
6. **சிமிக் லேபரேட்டரீஸ் (இந்தியா) லிமிடெட்,** பதிவு அலுவலகம்: D-15, சிட்கோ, பாரம்சூடிகல் இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், ஆலத்தூர், திருப்பூர் 603110, தமிழ்நாடு மாநிலம்.
7. செல்கேட் செமிகண்டக்டர்ஸ்,(பிரைவேட்) லிமிடெட், பதிவு அலுவலகம்: 'சீப்ரோஸ் ஆர்கேட்,' 11வது மாடி, 1, மூன்றாவது குறுக்கு, கஸ்தூரிபாய் நகர், அடையாறு, சென்னை 600020, தமிழ்நாடு மாநிலம்.
8. சம்பந்தப்பட்ட சங்கம்/தலாதி/எம்ஐடிசி.

MANAPPURAM HOME FINANCE LTD.

மணப்புரம் ஹோம் பைனான்ஸ் லிமிடெட்
முன்பு மணப்புரம் ஹோம் பைனான்ஸ் பிரைவேட் லிமிடெட்
CIN: U65923K12010PIC039179,
பதிவு அலுவலகம்: IV/470A, (பழையது) W/638A (புதியது) மணப்புரம் ஹவுஸ், வளபாடு திருச்சூர், கேரளா – 680 567
கார்ப்பரேட் அலுவலகம்: மணப்புரம் ஹோம் பைனான்ஸ் லிமிடெட், 3வது தளம், யூனிட் எண்.301–315, ஏ விங், ''கனக்கியா வால் தெரு'', அந்தேரி குர்லா சாலை, அந்தேரி கிழக்கு, மும்பை – 400 093, மகாராஷ்டிரா.
போன்: 022–66211000, இணையதளம் : www.manappuramhomefin.com

டிமாண்ட் நோட்டீஸ்

நிறுவனங்கள் சட்டம், 1956ன் கீழ் பதிவு செய்யப்பட்ட மணப்புரம் ஹோம் பைனான்ஸ் லிமிடெட் பதிவு அலுவலகம் : IV/470A (பழையது) w/638A (புதியது), மணப்புரம் ஹவுஸ், வளபாடு, திருச்சூர், கேரளா 680567 மற்றும் இந்தியாவில் பலவேறு இடங்களில் கிளைகளுடன் (இனி "MAHOFIN" என குறிப்பிடப்படுகிறது) செயல்படும் இந்நிறுவனம் நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் பாதுகாப்பு நலச் சட்டம் 2002ன் (இனிமேல் சட்டம் எனக் குறிப்பிடப்படும்) பிரிவு 2ன் உட்பிரிவு (1)ன் உட்பிரிவு (m)ன் உட்பிரிவு (iv)ன் பொருளில் உள்ள நிதி நிறுவனம் மற்றும் இந்திய அரசின், நிதிச் சேவைகள் துறையின், நிதி அமைச்சகம், புதுடெல்லி வெளியிட்ட டிசம்பர் 18, 2015 தேதியிட்ட அறிவிப்பு எண். எஸ்.ஓ. 3466 (இ) ஆகியவற்றின் கீழ் கட்டுமானம் மற்றும் / அல்லது குடியிருப்பு வீடுகளை வாங்குவதற்கான கடன் வழங்கும் வணிகத்துடன் மற்ற வணிகத்தை மேற்கொண்டு வருகிறது. அதேசமயம், கீழே குறிப்பிடப்பட்டுள்ள அட்டவணை வரிசை எண். 2 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி கடன்தாரர் / உடன் கடன்தாரர்கள் MAHOFINலிருந்து கடன் பெற்றனர் மற்றும் அதேசமயம் SARFAESI சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்பட்ட கடன் வழங்குனராக MAHOFIN உள்ளது மற்றும் 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டத்தின் 13(12) வது பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரத்தின் கீழும், 2002ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை (அமலாக்க) விதிகள், 3வது விதிமுறைக்கு ஏற்ப 91 நாட்களுக்கும் மேலாக நிலுவையில் இருந்த மாதாந்திர நிலுவைத் தொகையை செலுத்தாததால், இதன் மூலம் கடன் கணக்குகள் 03 ஜூன் 2024 அன்று செயல்படாத சொத்துக்கள் (NPA) என வகைப்படுத்தப்பட்டன, எனவே கீழ்க்குறிப்பிட்டுள்ள கடன்தாரர்/ அடமானதாரர்/உத்தரவாததாரர் ஆகியோருக்கு அனுப்பிய டிமாண்டு நோட்டீசில் குறிப்பிடப்பட்டுள்ளபடி செலுத்த வேண்டிய தொகையை மேற்சொன்ன நோட்டீஸ் கிடைத்த 60 நாட்களுக்குள் திரும்ப செலுத்துமாறு கேட்டுக் கொண்டிருந்தார்.

கடன்தாரர்/ அடமானதாரர்/உத்தரவாததாரர் மேற்சொன்ன தொகையை திரும்பச் செலுத்த தவறியதால் கடன்தாரர்/ அடமானதாரர்/உத்தரவாததாரர் மற்றும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் அறிவிக்கப்படுகிறது யாதெனில் கீழே கையொப்பமிட்டுள்ள பஜாஜ் பைனான்ஸ் லிமிடெட்டின் (பிஎஎல்) அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியானவர் கீழ்க்குறிப்பிட்டுள்ள சொத்தை மேற்சொன்ன சட்டத்தின் 13(4) பிரிவின் கீழ் கொடுக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படியும், மேற்சொன்ன 8வது விதிமுறைக்கு இணங்கவும் வசரிதன் எடுத்துக் கொண்டார். கடன்தாரர்/ அடமானதாரர்/உத்தரவாததாரருக்கு குறிப்பாகவும், பொதுமக்களுக்கு பொதுவாகவும் எச்சரிக்கப்படுவது யாதெனில், சுவாதீனம் எடுத்துக் கொண்ட இந்த சொத்து பஜாஜ் பைனான்ஸ் லிமிடெட்டிற்கு திரும்ப செலுத்த வேண்டிய தொகை மற்றும் வட்டிக்கும் பிணையமாக உள்ளது என்பதால், யாரும் மேற்படி சொத்து தொடர்பாக எந்தவித வில்லங்கமும் மற்றும் தொடர்புகளையும் வைத்துக் கொள்ளக் கூடாது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

| வ. எண். | கடன்தாரர்/ உடன்கடன